விலை ரூபா 1-25

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 மார்கழி 28 ரபி - ஆகி 20 இதழ் 329

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-1-85

● இலங்கை இனப்பிரச்னை

# வெளிநாட்டு உதவியுடன் தீர்க்க அரசு விரும்பவில்லை

## பாராளுமன்றத்தில் பிரதமர்

(கொழும்பு)

'இலங்கையின் இனப் பிரச்னையை எந்த வொரு வெளிநாட்டின் உதவியுடனும், எந்த நேரத்திலும் தீர்த்து வைக்க இந்த அரசாங்கம் எண்ணியதில்லை.'

இவ்வாறு பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''மக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியே இப்பிரச்னைக்கு தீர்வு காணப்படும். இலங்கையின் இனப்பிரச்னை ஒரு உள்நாட்டுப் பிரச்னையாகும்.

'இது ஒரு உள்நாட்டுப் பிரச்னையாகையால் இதனை இலங்கை அரசாங்கமே தீர்த்து வைக்கவேண்டுமென்று இந்தி

[4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

# வண பஸ்தியன்கொலை:லண்டன் ஆயர் அனுதாபம்!

## 'பூரண அமைதிக்கு உருக்கமாக பிரார்த்திக்கிறேம்'

[யாழ்ப்பாணம்]

யாழ் மறை மாவட்டத்தில் நிரந்தரமான அமைதி நிலவவும், பாதிக்கப்பட்டவர்கள், கொல்லப்பட்டவர்கள் அனைவருக்குமான நிவாரணப் பணிகள் சுமுகமாக இடம்பெறுவதற்கும் தாம் உருக்கமாகப் பிரார்த்திப்பதாக லண்டன் மாநகர கத்தோலிக்க ஆயர் கர்தினல் அதி. வண பசில் ஹியூம் தெரிவித்துள்ளார்.

வங்காலையில் வண. பிதா மேரி பஸ்தியன் கொலைசெய்யப்பட்டமை குறித்து யாழ் ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ள அனுதாபத் தந்தியிலேயே கர்தினல் கியூம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''வண. மேரி பஸ்தியன் உட்பட அவருடன் கொல்லப்பட்டவர்கள் குறித்து ஆழ்ந்த வேதனையடைகிறேன். இக்கொலைகள் சம்பந்தமாக இலங்கை ஜனதிபதிக்கு தாங்கள் அனுப்பியுள்ள அறிக்கையை நான் வரவேற்கிறேன்'' என்றும் கர்தினல் ஹியூம் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தந்தி கடந்த 7ம் திகதி லண்டனிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது கடந்த 5ம் திகதி வண. பிதா பஸ்தியன் கொலைசெய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை ரோந்துப் படகை

# இந்தியக் கடலோர காவல் படை கைப்பற்றியது!

## கைதான ஏழுபேரும் காவலில் வைக்கப்பட்டனர்

### அண்மைக்காலத்தில் முதல் சம்பவம்

(சென்னை)

நாற்பது தொன் எடையுள்ள இலங்கைக் கடற்படை ரோந்துப்படகொன்று இந்தியக் கடலோரக் காவல் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது' படகில் இருந்த காப்டனும் மற்றும் ஆறு கடற்படை சிப்பந்திகளும் இந்திய அதிகாரிகளின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளனர்.

(4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## "அழைப்பின்மீதே அருகில் சென்றது"

### வெளிவிவகார அமைச்சு அறிக்கை

(கொழுமபு)

இந்திய ரோந்துப் படகின் சமிக்ஞைக்கு இணங்கவே, இலங்கைக் கடற்படை ரோந்துப் படகு அருகில் சென்றது என்றும் கைதான இலங்கைக் கடற்படையினரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் இலங்கை அரசு இந்திய அர

(4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## 50 அடி உயரமான கொடிக் கம்பம் திடீர் மறைவு!

'யாழ்ப்பாணம்]

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் சிகிச்

(4ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## ஆசிரியர் இடமாற்ற பட்டியல் இதோ!

(கொழும்பு)

1983-ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டு ஏனைய மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களின் விபரம்:-

திரு. எஸ். வி. சிவசுப்பிரமணியம் சென். ஜோசேப் ம. வி. மஸ்கெலியா, திருமதி பூமாதேவி சிவசுப்பிரமணியம் தெய்வகோட்டே தமிழ் மகா வித்தியாலயம் மஸ்கெலியா,

(4-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

## 9 நாட்களில் 6 பேருக்கு 'மரணதண்டனை'

[திருகோணமலை]

1985 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து கடந்த 9ம் திகதி வரை திருகோணமலைத் தொகுதியில் ஆறுபேர் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டு கம்பங்களுடன் கட்டி வைக்கப்பட்டுள்ளனர்.

முதன் முறையாக தமிழ் இளம் பெண் ஒருவரும் 9-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டு கம்பத்தில் கட்டிவைக்கப்பட்டார்.

''துரோகிகளுக்கு இதுதான்

[4ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## கொக்குவிலில் நேற்று

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் பகுதியில் இராணுவத்தினரைக் கண்டு மினி பஸ்ஸிலிருந்த பிரயாணிகள் இறங்கி ஓடியபொழுது இராணுவத்தினர் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன் துறை வீதி வழியாகக் கவச வண்டிகளில் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரே துப்

(4ம் பக்கம் 3ம்கலம் பார்க்க

## "தேர்தலில் போட்டியிட தீவிரவாதிகள் முன்வரவேண்டும்"

### பிரஜைகள் குழு சந்திப்பில் ஜனதிபதி

(கொழும்பு)

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தீவிரவாதிகள் வன்செயல்களைக் கைவிட்டு நான் விரைவில் நடத்தவுள்ள தேர்தல்களில் போட்டியிட முன்வரவேண்டும்'

இவ்வாறு ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்றுக்காலை அவரைச் சந்தித்த தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவிடம் தெரிவித்தார் என்று ஜனதிபதி செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கை மேலும் கூறுவதாவது:

'தீவிரவாதிகளினல் பாதிக்கப்பட்ட வட்டாரங்களிலுள்ளவர்களின் பிரச்னைகளையிட்டு நான் அனுதாபம் கொண்டுள்

(4-ம் பக்கம் 5-ம்கலம் பார்க்க)

## 50 அடி தூரம் நடந்துசென்று எம்.ஜி.ஆர்.வழியனுப்பினர்

சென்னை, ஜன. 11

தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனை நியுயோர்க் புறூக்ளின் மருத்துவ மனையில் சந்தித்து, அளவளாவிய நிதியமைச்சர் திரு. வி. ஆர். நெடுஞ்செழியனும், தலைமைச் செயலாளர் திரு. கே. சொக்கலிங்கமும் நாடு திரும்பியுள்ளனர்.

திரு. ராமச்சந்திரன் மருத்துவமனையிலுள்ள தமது அறையிலிருந்து 50 அடி தூரம் வெளியே நடந்த வந்து, இவர்கள் இருவரையும் வழியனுப்பி வைத்தார்.

## "மக்கள் அந்நியப்படுத்தப்படுகிறர்கள்"

### பிரஜைகள் குழுவினர் அறிக்கை

[கொழும்பு]

தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் தூது கோஷ்டி ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவை நேற்றுக் காலை பத்து மணியளவில் அவரது அலுவலகத்தில் சந்தித்தனர்.

சுமார் ஒன்றரை மணிநேரம் வரை நடைபெற்ற மேற்படி சந்திப்பைத் தொடர்ந்து பிரஜைகள் குழு சார்பில் நேற்று மாலை விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

''ஜனதிபதியைச் சந்தித்த போது, தமிழ் மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்கள் அனுப

(3-ம்பக்கம் 5-ம் கலம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி நுணுவில் மேற்கு சேச் ஒழுங்கையில் பிரதான வீதியிலிருந்து ஐம்பது யார் தூரத்தில் நாலு பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: Dr. சி சுவாமிநாதன், சேச்லேன், நுணுவில் மேற்கு. 1310

யாழ் பெரியகடைக்கு அண்மையில் கொட்டடி வைரவர் கோவில் வீதியில் வீடு கட்ட அல்லது வியாபார களஞ்சியம் அமைக்க நல்ல சுற்றுடலில் கிணற்றுடன் கூடிய 1¼ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு த ஸ்ரீபதி, சட்டத்தரணி 20 பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1294

அண்மையில் இங்கிலாந்திலிருந்து கொண்டு வரப்பட்ட பாவித்த Industrial Singer தையல் மெசின் விற்பனைக்குண்டு. தொடர்பு இல:- 661 கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். 1296

நாச்சிமார் கோவில் அருகாமையில் 50 யார் அண்மையில் உள்ள ஒழுங்கையில் 1½ பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- ச. கணேசரட்ணம், 628/10 K. K. S. Road, யாழ்ப்பாணம். 1292

மானிப்பாய் மெம்மோறியல் பாடசாலை ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய 2½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வரத்தினம் செல்வராசா, 1-ம் குறுக்குத் தெரு, இணுவில் ரோட், மானிப்பாய். 1338

நல்ல இன கோப்பிக்கன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணுபாம், இணுவில் மொஸ்க் லேன் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். 1340

ஒரு பரப்புக் காணியும் அதிலமைந்த கல்வீடும் சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. திருமதி. க. ஜெயராசசிங்கம், 71/10A, அம்மன் கோவில் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். 1341

## தேவை

ஒரு பழைய மேசைக்கண்ணுடி (Dressing Table) தேவை. அதன் விபரத்தையும் விலையையும் எழுதவும். விளம்பர இல. 1327, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1327

7 வருடங்களாக வெளிநாட்டில் தொழில் புரியும், செவ்வாய்க்குற்றம் இல்லாத வண்ணுர் இனத்தைச் சேர்ந்த 36 வயதுடையவருக்கு அதே இனத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. உடனடியாக வெளிநாடு செல்லக்கூடியவராகவும், சுமாரன அழகு, கல்வி உடையவராகவும் இருக்க வேண்டும். சாதகக்குறிப்பு, புகைப்படத்துடன் விண்ணப்பிக்கவும். கண்ணியமாகப் பேணப்படும். விளம்பர இல. 1331, C/o ஈழநாடு. 1331

தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் அனுபவம் உள்ள எழுத்துக்கோப்பவர் (Compositor) உடன் தேவை. தகுந்த சான்றுகளுடன் நேரில் சமுகமளிக்கவும். அதிபர், புனிதவளன் கத்தோலிக்க அச்சகம், 360, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 1335

## FOR SALE

German Piano, Beautiful Tone Teak Body done by caves. Expect Rs. 20,000/- or nearest. 22, Kandy Road, Chundikuli, Jaffna. 1328

## CLASSES

German Language ஜேர்மனியில் பல்கலைக்கழக படிப்புகளைத் தொடர்வதற்கு ஏற்ற முறையில் ஜேர்மன் கலாச்சார நிலையத்தின் உதவியுடன் கற்றுக் கொடுக்கப்படும். வகுப்பு நேரம் தை 15-ம் திகதி தொடக்கம் காலை 6—8 வரை, மாலை 4—6 வரை. தொடர்பு: சபாநாயகம், ''றூடிக் கொட்'' 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 1306

## வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில், பல்கலைக்கழக மாணவிகள் தங்கக்கூடிய சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: இல. 30, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். அல்லது ஹரன் ரெக்ஸ்ரையில் திருநெல்வேலி. 1313

## யாழ்ப்பாணக் கல்லூரி

### வட்டுக்கோட்டை

**தைப்பொங்கலின் பின் கல்லூரி**
**15-1-85 அன்று ஆரம்பமாகும்.**

1984ம்-ஆம் ஆண்டுக்கான தரம் 12 பரீட்சைகள் 16-1-85 அன்று ஆரம்பமாகும். Lond O L, A L, தவணைப் பரீட்சைகளும் அதேநாள் ஆரம்பமாகும்.

(1332) அதிபர்

## நன்றி நவிலல்

அடியேனது அறுபதாண்டு நிறைவை முன்னிட்டு மணிவிழா எடுத்து, மலர் வெளியிட்டு, அன்னதானங்கள் நடாத்தி, பாராட்டுரைகள் பகர்ந்து, வாழ்த்துச் செய்திகள் அனுப்பிக் கௌரவித்த அனைவருக்கும், அன்பளிப்புக்களை வழங்கி, மணிவிழாச் சபையினரை ஊக்குவித்த பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து துர்க்காதேவியின் திருவருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

தங்கம்மா அப்பாக்குட்டி,
MISS. THANGAMMAH APPACUDDY, J. P.
President, Sri Durga Devi Devasthanam,
Tellippalai

9-1-1985 1329

## தவறிவிட்டது

கடந்த 7-ம் திகதி திங்கட்கிழமை மல்லாகத்திலிருந்து சுன்னுகம் ஊடாக புன்னுலைக் கட்டுவனுக்கு பஸ்ஸில் வரும் பொழுது எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து என்னிடம் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திருமதி, பூமணி மயில்வாகனம், புன்னுலைக்கட்டுவன் தெற்கு. 1343

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

## கேள்விப்பத்திர அறிவித்தல்

1985ம் ஆண்டிற்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பட்டுவரும் பிரசவவிடுதியின் அழுக்குத் துணிகளைச் சலவைசெய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 23-01-85ம் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் 22-01-85ம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் ரூபா 50/ வைப்புப் பணமாகவும், ரூபா 5/- கேள்விப்பத்திரக் கட்டணமாகவும் செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம்

இதன்கீழ்க் கையொப்பம் வைத்திருப்பவரிடமிருந்து அல்லது சுகாதாரவைத்திய அதிகாரியிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் பற்றிய ஏனைய விபரங்களையும், நிபந்தனைகளையும் தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

சுகாதாரப் பகுதி,
மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
08-01-85. 1336

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

யாழ்.பொதுசன நூல்நிலைய வளவினுள்

## போசனசாலை அமைத்தல் கேள்வி அறிவித்தல்

மேல்வரும் அமைப்பு வேலைக்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 1985ம் ஆண்டு தை மாதம் 22ம் திகதி செவ்வாய்க் கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 1985ம் ஆண்டு தை மாதம் 21ம் திகதி திங்கட்கிழமை நண்பகல்12-00 மணிவரை கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 150/ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம் செலுத்துவதன் பேரில்பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்

சீ வீ. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்.
09-01-1985 1337

**வியாபாரம் செய்ய விளம்பரம் பெருக**

## அறிவித்தல்

14-1-85 பொங்கல் தினத்தன்று நடக்கவிருந்தவட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் அதிர்ஷ்ட லாபச்சீட்டு இழுப்பு காலவரையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளது- தலைவர், லயன்ஸ் கழகம், வட்டுக்கோட்டை. 1339

## J.C.T.I

வட்டுக்கோட்டை

நடப்பு கல்வி ஆண்டுக்கான மூன்றும் தவணை 21-1-85 திங்கட்கிழமை ஆரம்பமாகும்.

இயக்குனர்

1318

## சைக்கிள் விண்ணப்ப படிவங்கள்

துவிச்சக்கர வண்டி உடமைக்கும் பாவனைக்குமான அதிகாரப்பத்திரம் பெறுவதற்குரிய விண்ணப்ப படிவங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எமது ஸ்தாபனத்தில் விற்பனைக்கு உண்டு.

ஈழநாடு

''உழுவோம்–உழைப்போம்–உயர்வோம்''




''உள்நாட்டு மூலப்பொருள்களை உற்பத்திக்கு- எடுப்போம்''
''உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு கொடுப்போம்.''
50 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை தபாலில் அனுப்பி அல்லது நேரில் கொடுத்து அப்பியாசக் கொப்பி ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்–யாழ்ப்பாணம்**

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ.)

## மின்தறியாலை யந்திரங்கள் விற்பனை

கீழ் காணப்படும் யந்திரங்கள் கேள்விக்கூற்று மூலம் விற்பனைக்குள்ளது.

1. டையிங் ஜிகர் (Dying Gigger)
2. கலண்டரிங் மெசின் (Calandering Mechine)
3. டையிங் மெசின். (Dying Mechine)
4. டபிள் ரைப் டெக்வைண்டர். (Double Deck Winder)

மேற்படி யந்திரங்களை காரியாலய நேரத்தில் பார்வையிட்டு தங்களால் கொள்வனவு செய்யக்கூடிய விலையை குறித்து சீல் வைக்கப்பெற்ற கடித உறையில் விண்ணப்பிக்கவும் விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்கு 25-1-85ம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
சங்கானை ப. நோ கூ. சங்கம்,
சங்கானை.

9-1-85 1321

★ தூய அலுமினியம் ★ பிளாஸ்டிக்
★ எவர்சில்வர் ★ எனாமல் ★ கண்ணாடி
★ தாச்சி வகைகள் ★ ஒக்கிட் (ORCHID) வாளிகள்
போன்ற பொருட்கள்

மங்கள வைபவங்களுக்கு உகந்த அன்பளிப்புப் பொருட்கள் யாவும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு எமது உற்பத்திப் பொருட்களும் மற்றும் எனாமல், பிளாஸ்டிக் ஒக்கிட் வாளிகளும் விசேட கழிவுடன் வழங்கப்படும்.

உங்கள் வசதி கருதி ஹோம் பிறன்ஸ் சொகுசு பஸ் ஆசனங்கள் எம்மிடம் பதிவுசெய்து கொள்ளலாம்

# நியூலங்கா

## அலுமினியம் தொழிற்சாலை

(விற்பனைப் பிரிவு)

இல: 6, 30, ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

போன்: 23596

## சிலாபம், நாத்தாண்டியாவில்
# 'வொய்ஸ் ஒவ் அமெரிக்காவுக்கு' 1000 ஏக்கர் நிலப்பகுதி!
## 188 மீனவக் குடும்பங்கள் பாதிப்பு!!

[கொழும்பு]

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்புச் சேவைக்கு ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி நாத்தாண்டியா, சிலாபம் தொகுதிகளில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனுல் இவ்விடங்களிலிருந்தும் 188 மீனவக் குடும்பங்கள் வெளியேறவேண்டியுள்ளது'.

இத்தகவல்களை வெளிவிவகார அமைச்சர் திரு ஏ ஸி. எஸ். ஹமீத் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அத்தனகல எம். பி. திரு லக்ஷ்மன் ஜயக்கொடி இவ்விடயம் தொடர்பாகக் கேள்வியொன்றை எழுப்பினுர். அப்போதே மேற்கண்ட தகவலை திரு. ஹமீத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' வுக்கான ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதிக்கு நாத்தாண்டியாவிலுள்ள துடுவாவையில் 200 ஏக்கரும், சிலாபத்தில் இரணவிற்ற என்ற இடத்தில் 800 ஏக்கரும் சுவீகரிக்கப்படவுள்ளன.

இதற்கான குத்தகை பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடக்கிறது 188 மீனவக்குடும்பங்கள் இப்பகுதியிலிருந்து வெளியேறும். இவற்றுக்கான புதிய வீடுகள், நஷ்ட ஈடுகள் என்பன வழங்கப்படும் என்றுர் (கி)

## விமானப்படைக்கு ஆறு புதிய 'பெல்' ரக ஹெலிகாப்டர்கள்!
### ஏப்ரல் முதல் உபயோகத்தில்

[கொழும்பு]

இலங்கை விமானப்படை ஆறு 'பெல்' ரக ஹெலிகாப்டர்களை இந்த ஆண்டு ஏப்ரல் மாதம்முதல் உபயோகப்படுத்தவுள்ளது.

இவை தலா ஒவ்வொன்றும் 12 துருப்புகளைக் கொண்டு செல்லக்கூடியவை. விசேட வானெலித்தொடர்பு சாதனங்களையும் இவை கொண்டிருக்கும்.

இந்த ஹெலிகாப்டர்களைச் செலுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் 12 இலங்கை விமானப்படைக்கட்ற் விமானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பெல்ரகத்தைச் சேர்ந்தபழையஹெலிகாப்டர்களே தற்போது பாவனையில் உள்ளன. இவை போதுமானளவு இடவசதியைக் கொண்டவையல்ல என்றும் கூறினுர் (கி)

## இம்மாத ஓய்வூதிய திகதிகள்

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் இம்மாதம் தபாலகம் மூலம் ஓய்வூதியம் வழங்கப்படும் திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

விபரம் வருமாறு: 15-1-85:- காரைநகர், அளவெட்டி, புங்குடுதீவு, வசாவிளான், நயினுதீவு, அனலைதீவு, கைதடி, வேலணை

16-1-85:- நெடுந்தீவு, பண்டத்தரிப்பு, கொடிகாமம்,

(4-ம் பக்கம் 4ம் கலம் பார்க்க

## காவலூர் பிரஜைகள்குழு அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுவின் அலுவலக நாளை ஞாயிறறுக்கிழமை காலை ஊர்கவற்றுறை, சுருவில் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது

குழுத்தலைவர் திரு பி பாக்கியநாதர் தலைமையில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் திறந்து வைக்கப்படவுள்ள இந்த அலுவலகம், மக்கள் சேவைக்கென தினமும் பணியாற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுதாக பொதுச் செயலாளர் திரு. எஸ். பி. ஐயர் தெரிவித்தார்,

## நிதிசேகரிப்பு இல்லையாம்!

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக் கழக மாணவர் அவை தமிழ் பிரதேசங்களில் தற்போது எந்தவொரு நிதி சேகரிப்பிலும் ஈடுபடவில்லை என்பதனை மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

## ஒரு நேரமாக பாடசாலை நடத்த கோரிக்கை

(சுண்டுக்குளி)

யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. அருணுசலம் நேற்று வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு சிமியாம்பிள்ளையைச்சந்தித்து பாடசாலைகளை ஒரு நேரமாக நடாத்தவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினுர்.

காலை 8 மணிமுதல் 1-30 மணிவரை இப்போதைக்குப் பாடசாலைகளை நடாத்தலாம் என்றும். புதியபாதுகாப்பு சட்டவிதிகள் அமுலிலிருப்பதால், இந்த ஏற்பாடு மாணவர்களுக்கும், ஆசிரியர்சளுக்கும் வசதியளிக்குமென்றும் அதிபர்சங்கத் தலைவர் தெரிவித்தார்.

## மக்கள்...

[1ம்பக்க 5ம் கலத்தொடர்ச்சி]

விக்கும் கடுமையான துன்பங்கள்பற்றி மிகுந்த கவலையுடன் பிரஜைகள் குழுவினர் எடுத்துரைத்தனர்

''கடுமையான நடவடிக்கைகள் காரணமாகவும், தடைவலயம், பாதுசாப்பு வலயம் சம்பந்தமான கடும்பிரமாணங் காரணமாகவும் தமிழ் மாவட்டங்களில் வாழும் பிரஜைகள் இலங்கையின் பொது அரச அமைப்பிலிருந்து அந்நியப்படுத்தப்படுவது குறித்தும் பொதுவான ஓர் அரசுக்குத் தாமும் உரியோம் என்றஉணர்வும் ஏற்பட்டுள்ளது என்றும் தூதுக் குழுவினர் தெரிவித்தனர்.

''தமிழ் மக்கள் அவலநிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தாம் நன்கு அறிவதாகவும், தமது ஆழ்ந்த அனுதாபம் உண்டு என்றும் ஜனுதிபதி தெரிவித்தார்

''உடனடி நிவாரண நடவடிக்கைளுக்கு படைப் பகுதியினருடனும், சிவில் நிர்வாகத்தினருடனும் தொடர்புகொள்வதே தமது பணி என்று குழுவினர் கூறினர்.

''நமது பணி அரசியல் சார்பற்றது என்று வற்பிறுத்திய புறுத்திய பிரஜைகள் குழுவினர், அரசின் தலைவருக்குத் தமிழ் மக்களின் உண்மை நிலையைக் கூறுவது முக்கிய பணி என்று தெரிவித்தனர்.

''ஆயுதங்களைக் கைவிடுவதற்கான ஒரு கோரிக்கையைப் பிரஜைகள் குழு விடமுடியுமா என்று ஜனுதிபதி வினவியபோது தமது வரையறுக்கப்பட்ட பங்கினை மீளவுய வலியுறுத்திய தூதுக் குழுவினர், ஒரு தீர்வுக்கான அழைப்பினை ஜனுதிபதி விடுவதைத் தூண்டுவதற்குச் சந்திப்பு உதவவேண்டும் என்ற நம்பிக்கையையும்

(4-ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

## சிறில் மத்தியூவின்
# தொழிற்சங்க அச்சகத்துக்கு "சீல்" வைக்கப்பட்டது!
## வாகனங்களும் பறிமுதல்!!

(கொழும்பு)

முன்னுள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூவின் தொழிற் சங்க அச்சகம் பொலிஸாரினுல் சீல்வைக்கப்பட்டது.

அரசங்க சார்பு 'ஜாதிக சேவக சங்கமய' என்ற இந்த சங்கத்தை சி ஐ டி பொலிஸாரே சீல்வைத்து மூடினர்.

அமைச்சரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட திரு. சிறில் மத்தியூவுக்கு ஆதரவாக இந்த அச்சகம் சுவரொட்டிகளை அச்சடித்திருந்தது. இச் சுவரொட்டிகள் அரசாங்கத்தைக் கண்டிப்பனவாக இருந்தன.

இந்த சுவரொட்டிகளில் பல கொழும்பின் சுற்றுப்புறங்களிலுள்ள கேந்திரப் பகுதிகளில் ஒட்டப்பட்டுமிருந்தன இதனையடுத்தே திரு. சிறில் மத்தியூவின் தொழிற்சங்க அச்சகம் சீல் வைக்கப்பட்டது.

இத்துடன் ஜாதிகசேவக சங்கமய தொழிற்சங்கத்தின் வாகனங்களும் போக்குவரத்துச் சபையினுல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன இச்சங்கத்தின் தேவைக்கென ஐந்து ஜீப் வண்டிகளும், ஒருவான் வண்டியும் போக்குவரத்துச் சபையால் வழங்கப்பட்டிருந்தன இவ்வாகனங்கள் மத்தியூவுக்கு ஆதரவான அரசாங்க எதிர்ப்புப் பிரசுரங்களை ஏற்றித்திரிந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ராணுவத்தினர் விநியோகிக்கும் துண்டுப்பிரசுரம்!

(மாவிட்டபுரம்)

வீதியால் ரோந்து சுற்றும் இராணுவ வாகனங்கள் பொதுமக்களுக்கு சில பிரசுரங்களை விநியோகித்துச் செல்கின்றன.

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக தகவல் தருமாறு கோரும் பிரசுரங்கள் முன்னர் ஹெலிக்கப்டர் மூலமே விநியோகிக்கப்பட்டு வந்தது. ஆனுல் தற்போது வீதியால் ரோந்து சுற்றும் ராணுவ வாகனங்களிலிருந்தும் இப்பிரசுரங்கள் விநியோகிக்கப்படுகின்றன.

ராணுவ வாகனம் சென்றபின் வீதிமுழுவதும் இப்பிரசுரங்கள் சிதறிக்கிடக்கின்றன

## அமைதிக்காக பிரார்த்தனை

(சுழிபுரம்)

மார்கழி கடைசிநாளான வரும் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிற்பகல்வரை பண்ணுகம் சத்சங்க வட்டத்தின் சத்சங்கிகளால் திருவாசகமுற்றும் ஓதல் பண்ணுகம் விசவத்தனை முருகன் ஆலயத்தில் நடைபெறும் நாட்டில் அமைதியும், ஒழுங்கும், நீதியும் நிலைக்க இறைவன் அருளை வேண்டியே இத்திருவாசக முற்றும் ஓதல் நடைபெற ஏற்பாடகவுள்ளது. ஓதுவார்கள் பலர் பங்குகொண்டு திருவாசகம் ஓதுவார்கள்.

## "தைப்பொங்கல் தினத்தில் பட்டாசு கொளுத்தாதீர்!"
### பல்கலைக்கழகமாணவர்கள் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ் பிரதேசங்களில் நிலவும் நெருக்கடியான சூழ்நிலைகளை கருத்தில்கொண்டு எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தில் பொதுமக்கள் பட்டாசுகளை கொளுத்தவேண்டாம் என்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அறிக்கை ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பட்டாசுகளை கொளுத்துவது இன்றைய நிலையில் ஏற்புடையதல்ல என்பதனுல் பொதுமக்கள் பட்டாசுகளை தைப்பொங்கல் தினத்தில் கொளுத்தாமல் விடுவது சிறந்ததாகும்என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று வர்த்தகர்களும் தைப்பொங்கலை முன்னிட்டு பட்டாசுகளை விற்பனை செய்யாமல் விடுவது பொதுமக்களிடம் தாம் விடுத்துள்ள மேற்படி கோரிக்கைக்கு ஆதரவாக அமையுமென்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வர்த்தகர்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளனர். (சு)


றீகல் மினி
தினசரி 10-15, 1-15 மட்டும்.
கமலஹாசன்-ஸ்ரீபிரியா நடிக்கும்
எனக்குள் ஒருவன்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ் நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)


## கண்டனம்

[கரவெட்டி]

வங்காலையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை தமிழர் விடுதலைக் கூட்டணி வன்மையாகக் கண்டித்துள்ளது

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. மு சிவசிதம்பரம் இது தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையில்:-

அமைச்சர் லலித் அத்துலத்முதலி அண்மையில் வடபகுதி மக்கள் தற்பொழுது இராணுவத்தினர் பற்றிக் குறை கூறுவதில்லை என்று கூறியுள்ளார். ஆனுல் அவருக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடப்பவை தெரியாதிருக்கலாம்.

## இன்று பென்ஷன்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி குருநகர் கிளையில் பென்ஷன் பெறுகின்றவர்களுக்கு இன்று சனிக்கிழமை கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். சனிக்கிழமை தவறினுல் அடுத்த செவ்வாய்க்கிழமையே பென்ஷன் பெறமுடியும்.


Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினுன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்

- ★ சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- ★ T. V. மேசை,
- ★ தண்ணீர்த் தாங்கி,
- ★ WASH BASIN
- ★ TEAPOYS, ★ CENTRE TABLE,
- ★ VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கேபெற்றுக்கொள்ள

இன்றே நாடுங்கள்,

TRADE CENTRE,
ஹோம் பினுன்ஸ் லிமிட்.,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## மணிவாக்கு

இல்லையென்று சொல்கிலோம்
யார்பாலு மன்புடையோம்
எல்லையில்லாவின்ப மெவர்க்குங்
குடியல்லோம்
தில்லைவாழ் தெய்வத்திருவடியைச்
சிந்தித்து
நைவோமிலங்கை நம்நாடு

—சிவயோகசுவாமிகள்

# நமதுநோக்கு

## ஆசிய அரசியல்

ஆசிய நாடுகளில் உருவாகும் ஒரு கட்சி ஆட்சி பற்றி 'நியூஸ் வீக்' கட்டுரையை எமது நேற்றைய பிரசுரத்தில் வாசகர்கள் படித்திருப்பார்கள்.

இன்றைய இயம வேதனையில் இதுபற்றிச்சிந்திக்க மக்களுக்கு அவகாசம் உண்டா? எனபது நியாயமான கேள்வி; ஆனால் ஆழமற்றது.

இலங்கை பற்றி அக்கட்டுரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை; சின்ன நாடென்பதல்ல; சிங்கப்பூர் இடம் பெற்றிருக்கிறதே!

இந்தியாவைப் பற்றிய கருத்து விவாதத்துக்குரியது; நேரு போன்ற பெருந்தலைவர்கள் சடுதியில் மறைந்துவிட்டால் ஆசிய நாடுகளில் ஒருபெரும்இடைவெளிநிரப்பமுடியாத நிலை ஏற்படுகிறது என்கிறார் 'நியூஸ் வீக்' கட்டுரையாளர்.

உண்மைதானா? தயக்கத்துடன் பதவியேற்ற இந்திரா பாரத்தை 17 வருடங்கள் ஆண்ட திறமை உலகெங்கிலும் பாராட்டப்பட்டிருக்கிறது. ஜனநாயக நாடுகளில் ஆட்சித் தலைவர் சதிக்காளாகி கொலைசெய்யப்படுவதில்லையா?

இந்திரா ஆட்சியில் ஜனநாயகம் தளப்பமுறவில்லையென்று சொல்வது தவறு? மக்கள் குரலுக்கு செவி சாய்த்து இடர்நேர்ந்த போதெல்லாம் அதற்கு வேண்டிய பிராயச்சித்தம் நிறைவேறியிருந்ததை கடந்த பொதுத்தேர்தல் புலப்படுத்துகிறது.

ஒருகட்சி ஆட்சி எபதும் தவறாகும்; அகில இந்திய அடிப்படையில் பலம்பெற்றிருந்த இந்தியா தேசிய காங்கிரஸ் என்ற ஒரு கட்சி மூன்றாய்ப் பிரிந்தபோதும் இன்றைய இந்திரா காங்கிரஸ் பாரதம் அனைத்தின் ஆதரவைப் பெற்றிருக்கிறது.

ஆந்திரப்பிரதேசம் விதிவிலக்காக இருப்பதும் ஜனநாயகக் கோட்பாட்டுக்குப் பலம் அளிக்கின்றது.

நேரு, இந்திரா, ரஜீவ், 1947-1985 என்ற கால எல்லையில் சுமார் மூன்று வருடங்களைத் தவிர ஆட்சி புரியும் ஒரே குடும்பம் என்பதால் இது குடும்ப ஆட்சி, பரம்பரை ஆட்சி என்று சிங்கப்பூருடனும், வட கொரியாவுடனும், தாய்வானுடம் ஒப்பிடலாமோ? பொதுத்தோதலில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுத் தோற்கடிக்கப்பட்டும் ஜனநாயக மரப்பைக் காத்துவருவது இந்தியா.

இந்த ஆய்வில், ஒரு கட்சி ஆட்சிக்கோ, பரம்பரை ஆட்சிக்கோ பலியாகாத நாடு இலங்கை என்பதால் அது கட்டுரையில் விடுபட்டிருக்கலாமா? அது உண்மையாயாயின் ஆசியாவின் மிகச் சிறிய நாடுகளில் ஒன்ருன இலங்கை மக்கள் ஆட்சியில் சுகம் பலம் பெற்றிருக்கின்றதென்று சொல்லலாமே.

அவ்வாறு சொல்வது கேலியென்பதும் கட்டுரையாளருக்குத் தெரியும். இந்தியாவைப் பற்றிய கருத்து சர்ச்சைக்குரியது. இலங்கை முற்ருக விடப்பட்டிருக்கிறது.

இந்திய உப கண்டத்தில் உள்ளபாகிஸ்தான் பங்களாதேஷ் பற்றி ஒரு வார்த்தையும் கட்டுரையில் காண முடியவில்லை.

ராணுவ ஆட்சியே இரு நாடுகளில் இருந்தபோதும், ஜனநாயகம்பற்றி அரும் பெரும் கருத்துக்களைப் பொழிவதில் இருநாடுகளின் ராணுவஜனாதிபதிகள் சற்றும் ஒய்வதில்லை.

பாகிஸ்தானில் நடைபெற்ற திருவிளையாடல்களில் கடைசியானது பொது ஜனவாக்கெடுப்பு. ஜனநாயகம் குழிதோண்டி புதைக்கப்பட்டது என்று போராடும் எதிர்க்கட்சிகளுக்கும் உலகுக்கும் ஒருகண் துடைப்பே இன்று நடந்தேறிய பொதுஜனவாக்கெடுப்பு.

பொருளாதாரம் பரவாயில்லை என்ற துணிவும், வெளிநாட்டு ஆதரவும் இந்த யதேச்சாதிகாரத்துக்கு உதவுகின்றன.

அப்கானிஸ்தானின் சோவியத் பலத்தை முறியடிக்க அமெரிக்கா பாகிஸ்தானுக்கு என்றும் உதவும்போல தெரிகிறது. எனவே ஜனநாயகத்தில் அதற்கு என்ன ஆசை?

பங்களாதேஷின் ராணுவ ஜனாதிபதி எச். எம். எர்ஷாட் எத்தனை திருகுதாளங்களை நடத்துகிருர்? டிசம்பரில் நடந்த வேலை நிறுத்தம் அவருடைய கண்களை விழிப்படையச்செய்தது. பதினைந்து கட்சி முன்னணியே அந்நாட்டின் பிரதம எதிர்க்கட்சி. பங்களாதேஷின் தந்தை முஜிபுர் ரகுமானின் மகளே அதன் தலைவி. அத்துடன் ஏழு கட்சிகள் ஒருங்கிணைந்த 'பீ என்பி' என்ற தேசியக் கட்சியும் சோந்துவிட்டதால், வருகிற ஏப்றலில் பொதுத் தோதல நடத்தவும் வாக்களித்திருக்கிருர்.

இராணுவஆட்சிகளேஇவ்விரு நாடுகளையும் பீடித்திருக்கும் பெரும்பிணி

ஆசியா பலமடைவதை மேனுடுகளோ மேனுநாட்டு விமர்சர்களோ விரும்புதில்லை.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ப இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 12-ப் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram one phone number 22389-24126.

### இலங்கை....

(1 ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

இந்திய கடற்பிராந்தியத்தில் நேற்றுக்காலை ஆறரை மணியளவில், மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களைக் கடுமையாகக் தாக்கி அவர்களிடமிருந்து மீன், ருல்களையும் ,வலைகளையும், பணத்தையும் பறித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்ட இலங்கைக் கடற்படையின் இயந்திர ரோந்துப் படகு ஒன்றை இந்திய கடலோர காவல் படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இலங்கை கடற்படை படகிலிருந்த காப்டன் லெப்டினன்ட் குணதிலகா மற்றும் பிரான்சிஸ், பிரேமதிலகா, பிரேம்குமார், அபித்தாரியா, சுமத்திரபாலா, பிரேமதிலகா ஆகிய ஆறு கடற்படை சிப்பந்திகளும் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை இந்திய மீனவர்கள் 20 இழுவைப் படகுகளில் இந்திய கடற்பிராந்தியத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் மேற்படி ரோந்துப் படகு இப்பகுதியில் அத்துமீறிப் பிரவேசித்து மீனவர்களை கடுமையாகத் தாக்கியதோடு படகிலிருந்த இந்திய மீனவர்களிடமிருந்து 400 கிலோ கிரும் நிறையுள்ள மீன்களையும் வலைகளையும் சிறு தொகைப் பணத்தையும் பறித்துக் கொண்டு சென்றனராம்.

தாக்கப்பட்ட மீனவர்கள், அருகில் கடல் கண்காணிப்பில் நின்று கொண்டிருந்த இந்திய கடலோர பாதுகாப்பு கப்பலிடம் இதுகுறித்து தெரிவித்ததாகவும், இலங்கைப் படகு சென்ற திசையைக் கேட்டறிந்த இந்தியக் கப்பல் உடனடியாக அத்திசையில் சென்று இலங்கைப் படகைக் கைப்பற்றியதோடு அதிலிருந்த ஏழு பேரையும் கைதுசெய்தது.

இலங்கை கடற்படைப்படகு இராமேஸ்வரத்துக்கும் பாபன் கலங்கரை விளக்கத்துக்கும் இடையில் கைப்பற்றப்பட்டதாக இராமேஸ்வரம் பொலிசார் தொிவித்தனர்.

இலங்கைக் கடற்படையினர் இயந்திரத் துப்பாக்கிகளையும், 'ஸ்ரென் கன்', றைபிள் போன்ற ஆயுதங்களையும் வைத்திருந்தனராம்.

கைப்பற்றப்பட்ட இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகையும், காப்டன், மாலுமிகளையும இந்தியக் கடலோரக் காவற் படையினர் தற்போது விசாரணைக்காக மண்டபத்திற்குக் கொண்டுவந்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் இலங்கையின் கடற்படைப் படகு ஒன்றை இந்தியக் கடலோரக் காவற்படையினர் கைப்பற்றியது இதுவே முதல் சம்பவமாகும்.

### வெளிநாட்டு...

1 ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி]

யப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

'நாட்டின்ஒருமைப் பாட்டை ஏற்காத தமிழர் விடுதலை கூட்டணியினரை சர்வகட்சி மகாநாட்டிற்கு அழைக்க வேண்டுமென்று சிறீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவே கூறியிருந்தார்.

'சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரே இந்தியாவின் உதவியின்றி இலங்கையின் இனப் பிரச்னையைத் தீர்க்க முடியாதென்று கூறிவருகின்றனர்.

'பாராளுமன்றத்தின் அங்கீகாரமின்றி இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்ப்பது தொடர்பான எந்தவித சட்டங்களையும் நிறைவேற்ற முடியாது'' என்ருர்.

### கொக்குவிலில்...

(1ம்பக்க 2ம்கலத் தொடர்ச்சி]

பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இப்படியும் நடக்கிறது

அவசியம் வெளியிடுமாறு வலியுறுத்தி ஸ்ரீமான் பொதுஜனம் அனுப்பிவைத்த பாடல் இது.

நமது சுயதணிக்கையிலிருந்து தப்பிய இருவரிகளை மட்டும் இங்கு தருகின்ருேம்:

''...டவுனு பக்கம் போகாதீங்க.... உங்களை டவுனுக்கி விடுவாங்க......''

— ஊடுருவி

### ஒன்பது நாட்களில்—

(1ம் பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

தண்டனை'' என்று எழுதப்பட்ட துண்டுகள் இப் பிரேதங்களின் அருகில் காணப்பட்டன.

## இம்மாதம்...

[3ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி

மானிப்பாய், உரும்பிராய், வட்டுக்கோட்டை, சங்கானை,

17-1-85:- கோப்பாய், அச்சுவேலி, சுழிபுரம், யாழ்ப்பாணம்.

18-1-85:. யாழ்ப்பாணம், கொக்குவில், சாவகச்சேரி, வண்ணார்பண்ணை, காங்கேசன்துறை

21-1-85;- தெல்லிப்பளை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை.

22-1-85:- சுன்னுகம், கரவெட்டி, ஊர்காவற்றுறை.

## சென். பற்றிக்ஸில் இன்று திருப்பலிப் பூசை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வங்காலையில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட வண. பிதா மேரி பஸ்ரியனின் ஆத்ம இளைப்பாற்றிக்காக, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இன்று காலை, மேற்படி கல்லூரியின் தேவாலயத்தில் திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுக்கின்றனர். (வி)

### கொடிக்கம்பம்......

[1ம்பக்க 3ம் கலத்தொடர்ச்சி]

சைப் பிரிவு முன்பாக, கம்பீரமாகக் காட்சியளித்த ஐம்பது அடி உயர கொடி (ஏற்றும்) கம்பம் நேற்றிரவு எட்டு மணியளவில் மர்மமாக மறைந்துவிட்டது!

### அழைப்பின் பீது....

(1ம்பக்க 2ம் கலத்தொடர்ச்சி)

சைக் கேட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு இந்திய அரசுக்கு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இலங்கை ரோந்துப்படகு தனது வழமையான கண்காணிப்பு நடவடிக்கையின் போது சில இந்திய மீன்பிடிப்படகுகளை அவதானித்தது அதேநேரத்தில் இந்திய ரோந்துப் படகொன்றிலிருந்து சமிக்ஞையும் வந்தது. இதற்கிணங்க, இலங்கை ரோந்துப் படகு இந்திய ரோந்துப் படகின் அருகில் சென்றது''

''கைதான கடற்படையினரை உடன் விடுதலை செய்க. இதுகுறித்து அவசரமீது இலங்கை அரசு தனியாக விசாரணை மேற்கொள்ளும்.''

துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்கத்தொடங்கியதைத் தொடர்ந்து யாழ். நகரிலுள்ள கடைகள் இழுத்து மூடப்பட்டன. பீதியடைந்த பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடத் தொடங்கினர். (மா)

### ஆசிரியர்...

(1ம்பக்க5-ம்கலத் தொர்டச்சி)

திரு. கே. சிதம்பரநாதன் புனித. ரினிற்றி நுவரேலியா, திருமதி ஆர். ராஜரத்தினம் கொலிறூட தலவாக்கொல்லை, (தொடரும்)

### மக்கள்..

[3ம்பக்க 5ம் கலத்தொடாச்சி]

ஆசையையும் குழுவினர் தெரிவித்தனர்.

''அவ்வாறு நிகழுமேயாளுல் இத்தூதுக் குழு, தமது பங்கினைச் சாதித்துவிட்டது எனலாம்'' என்று மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஜைகள் குழுவின் தூது கோஷ்டியில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவனியா, முல்லைத்தீவு, மன்னுர், திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த பன்னிரண்டு அங்கத்வர்கள் இடம்பெற்றிருந்தனர்.

### தேர்தலில்....

(1-ம்பக்க5ம்கலத் தொடர்ச்சி)

ளேன்.

'நாட்டின் ஜனநாயக அமைப்பை சீர்குலைக்க எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியையும் நாட்டின் தலைவர் என்ற வகையில் தடுக்க வேண்டியுள்ளது.

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் குறுகிய காலத்தில் தேர்தல்களை நடத்த நான் உத்தேசித்துள்ளேன்

'இவ்வாறு தேர்தல்களை நடத்தலுல ஜனநாயக கோட்பாடுகளை மேலும் பாதுகாக்க முடியும்

'தீவிரவாதிகளை வன்செயல்களைக் கைவிட்டு, தேர்தலில் போட்டியிடுமாறு கேட்டுக் கொள்ளும்படி இக்குழுவிடம் ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார்

''இந்தக் குழு தத்தமது வட்டாரங்களில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் பற்றி ஜனாதிபதியிடம் தெரிவித்தது.''

''தமிழ்மக்களைப் பாதுகாக்கும்படி வேண்டுகோள்விடுத்த இந்த இணைப்புக்குழு, தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றி ஜனாதிபதியிடம் தெரிவித்தது.''

''இந்தக்குழு பயங்கரவாதத்தைத் தடுப்பதற்கும், அது பரவுவதைக் சட்டுப்படுத்துவதற்குமான ஜனாதிபதியின் நடவடிக்கைகளை முற்றிலும் ஆதரிப்பதாகவும் தெரிவித்தது.''

''தமது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட குறிப்பிட்ட பிரச்னைகளையிட்டு, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் விசாரணை செய்வாரென்றும், கூடுமானவரை நிவாரணம் அளிக்கப்படுமென்றும் ஜனாதிபதி கூறினார்''

''ஜனாதிபதி தமது முறைப்பாடுகளைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டமைக்காக இக்குழுவினர் நன்றி தெரிவித்தனர்''

"இச் சந்திப்பில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியும், ஜனாதிபதியின் செயலாளர் திரு. டபிள்யூ எம். பி. வி. மெனிக் திவெலவும் கலந்து கொண்டனர்.''